புதுப்பேட்டை கிராமத்து உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

150—(*வினா எண். *502*) திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதியில் புதுப்பேட்டை கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : 1989-90-ஆம் கல்வி ஆண்டில் புதுப்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு வேலூர் முதன்மைக் கல்வி அலுவலரிடம் இருந்து உரிய கருத்துருக்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்டுள்ளன. அக்கருத்துருக்கள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் அவற்றைப் பரிசீலித்து நிதி நிலைக்கேற்ப உரிய ஆணை வெளியிடப்படும்.

சென்னை நகரப் பேருந்துகளை அதிகப்படுத்துதல்.

151—(*வினா எண். *241*) திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரப் பேருந்துகளில் பிரயாணிகளின் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு மேலும் அதிகப் பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஆம். ஆடுத்த ஐந்து ஆண்டிற்கு உலக வங்கியின் உதவியுடன் ஆண்டுதோறும் 50 பேருந்துகள் அதிகரிக்கத் திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது. அத்துடன் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக ஆண்டுதோறும் 250 புதிய பேருந்துகள் இயக்கத் திட்டம் உள்ளது.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, 'வி' சர்வீஸ், 'வீவீ' சர்வீஸ், 'ஜே' சர்வீஸ் 'ஜேஜே' சர்வீஸ் என்று புதிதாக விரைவு வண்டிகள் விடப்பட்ட பிறகு ஏற்கெனவே ஓடிவந்த 300 பஸ்கள் ஷெட்டுகளிலே நிறுத்தப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? இவைகளை ஓட்டச் செய்தால் ஓரளவிற்குத் தற்காலிகமாக இந்த நெரிசலைக் குறைக்கலாம். நீங்கள் சொல்லக்கூடிய திட்டத்தை விட இது நல்லதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. அந்த அடிப்படையிலே அதை ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.